**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093829

1. District மாவட்டம்: தஞ்சாவூர்
   PS: காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு
   Year ஆண்டு: 2019  FIR No. மு.த.அ. எண்: 04/2019  Date நாள்: 03.06.2019.
2. (i) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: IPC & PC act 1988  Sections பிரிவுகள்: 120(b), 467, 468, 471 IPC
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்: 13(1)(c) r/w 13(2) of PC Act 1988 r/w 109 IPC
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:
3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள்
   Date from: நாள் முதல்: 2016ம் ஆண்டு முதல்  Date to: நாள் வரை: 2017ம் ஆண்டு வரை
   Time Period: நேர அளவு  Time from: நேரம் முதல்  Time to: நேரம் வரை
   (b) Information Received at PS. Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 13.05.2019.  Time நேரம்: [illegible]
   (c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பின் பதிவு விவரம் எண்: 06 - 03. 2019  Time நேரம்: 16.30 hrs. ([illegible])
4. Type of Information: Written/ Oral: தகவலின் வகை: எழுத்து மூலம் / வாய் மொழியாக: எழுத்து மூலம்
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: பூதலூர் ஊராட்சி ஒன்றியம்.
   Beat Number: முறைக் காவல் எண்  (b) Address: முகவரி: ஒன்னடையம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கிராமம் - வடமேற்கு - கி.மீ - 35 கி.மீ.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S: இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த கா.நி.பெயர்  District: மாவட்டம்
6. Complainant /Informant (a) Name: குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: R. இராமச்சந்திரன்
   (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர்: N. இராம. கோபால்
   (c) Date / Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு: 1964.  (d) Nationality: நாட்டினம்: இந்தியர்.  (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue: வழங்கப்பட்ட நாள்  Place of Issue: வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation: தொழில்: பூதலூர் ஒன்றிய ஆணையாளர் (CPI)
   (g) Address: முகவரி: கிராமம் ஒன்னடையம்பட்டி, பூதலூர் (தாலுகா), தஞ்சாவூர் மாவட்டம்.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திரு. V. குமார் ஊராட்சி செயலர் ஒன்னடையம்பட்டி, (2) திரு. மு. பாரதிமோகன் ([illegible]). (3) திரு. வி. ரமேஷ் (பொருளாளர்) (4) திரு. த. ரகுநாதன் (பூதலூர் [illegible]) பூதலூர் ஊராட்சி ஒன்றியம், பூதலூர் மற்றும் பிறர்.
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   புகார் மனு [illegible] விசாரணை செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு :

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்தனுப்பப்படுகிறது</u>

இன்று 03.06.2019 ஆம் தேதி 16.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் ஆகிய நான், தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு (பொறுப்பு) துணை காவல் கண்காணிப்பாளராக அலுவலகத்தில் இருந்த போது, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண். PT222/2019/RDP/TH, நாள்.07.05.2019ன்படி 13.05.2019-ல் கிடைக்கப்பெற்ற குறிப்பாணையில் இணைக்கப்பட்டுள்ள திரு.R.இராமச்சந்திரன், பூதலூர் ஒன்றிய செயலாளர், இந்திய கம்னியூஸ்ட் கட்சி, இராயமுண்டான்பட்டி, தஞ்சாவூர் என்பவரது புகார் மனுவை பார்வைக்கு எடுத்துக் கொண்டேன். திரு.R.இராமச்சந்திரன், பூதலூர் ஒன்றிய செயலாளர், இந்திய கம்னியூஸ்ட் கட்சி, இராயமுண்டான்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம். Cell 8489689622 CPI என்ற Letter Pad-ல் உள்ள புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: Date 01.01.2019 தஞ்சாவூர் பெறுநர்: உயர்திரு இயக்குனர் அவர்கள், ஊழல் மற்றும் லஞ்சம் ஒழிப்புத்துறை (DVAC), சென்னை - 600016.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. இராமச்சந்திரன் [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
3/6-2019

[signature] 03/06/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.06.2019 at 17.00 hrs.

Name: பெயர் B.MANIKANDAN
Rank: நிலை D.S.P., V&AC, No. எண்
Tricky
I/c. Thanjavur

பொருள்:அரசு பணத்தை கூட்டு சதி செய்து கையாடல் செய்த அரசு அலுவலர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை - கோரி, மதிப்பிற்குரிய ஐயா, நான் தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், வெண்டையம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட ராயமுண்டான்பட்டி கிராமத்தில் வசிக்கிறேன். நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளராக செயல்பட்டு வருகிறேன். நான் சமூக வெளியில் மக்களின் நலன்களுக்காகவும், பொது நோக்கத்திற்காகவும், அரசின் திட்டங்கள் மக்களிடம் சென்று அடைவதற்கு பாடுபடுவதோடு அரசின் திட்டங்கள் மூலம் மக்களுக்கு கிடைக்க வேண்டிய பணப்பயன்கள் உள்ளிட்ட நலத்திட்டங்கள் உரியவாறு சென்றடையாமல் தனி நபரோ, அரசு அலுவலர்களோ முறைகேட்டில் ஈடுபட்டு அரசிற்கு பண இழப்பு ஏற்பட்டால் அதனை வெளிக்கொணர்ந்து மக்களுக்கு உரியவாறு நலத்திட்டங்கள் கிடைத்திட செயல்பட்டு வருகிறேன். அந்த வகையில் எனது ஊராட்சியான தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், வெண்டையம்பட்டி ஊராட்சியில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம், தனிநபர் இல்லக் கழிவறை அமைக்கும் திட்டம் உள்ளிட்ட அரசு திட்டங்களில் வெண்டையம்பட்டி ஊராட்சியின் செயலர் திரு.வி.குமார், பணி மேற்பார்வையாளர் திரு.ஜி.ராதாகிருஷ்ணன், பொறியாளர் திரு.ஜி.ரமேஷ் மற்றும் பூதலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திரு.து.ரகுநாதன் ஆகியோர் **"கூட்டாக சதி செய்து அரசு பணத்தை கையாடல் செய்ய அரசு அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியுள்ளார்கள்."** மேற்படி நபர்கள் ஊழல் மற்றும் கையாடல் செய்தது சம்மந்தமாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரால் அமைக்கப்பட்ட விசாரணை அதிகாரிகள் கொடுத்துள்ள ஆய்வறிக்கைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதில் கீழ்க்கண்டவாறு ஊழல் நடைபெற்றுள்ளதை குறிப்பிட்டு அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளது.

<u>கையாடல் 1</u>:

பூதலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வெண்டையம்பட்டி ஊராட்சியில் 2016-2017ம் ஆண்டில் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்கீழ் (ஊரகம்) கீழ்காணும் 3 பயனாளிகளுக்கு தலா 1 வீடு வீதம் 3 வீடுகள் கட்டாமலேயே நான்கு நிலை பணிகளுக்கான பட்டியல்கள் அரசு விதிமுறைகளுக்கு மாறாக **"போலியான முறையில் ஆவணங்கள் தயார் செய்து; இணையதளத்தில் பதிவு செய்து"** முழு பட்டியல் தொகை ரூ.3,60,000/- மற்றும் மூலப்பொருட்களுக்கான கிரயத்தொகை ரூ.85,176/- என்ற வகையில் அரசு நிதியிலிருந்து கூடுதல் தொகை ரூ.4,56,166/- கையாடல் செய்யப்பட்டுள்ளது. பயனாளிகள் அனைவரும் தொகையினை ஊராட்சி செயலர் திரு.வை.குமாரிடம் கொடுத்துள்ளனர். அவர் மூலம் மற்ற அரசு அலுவலர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

முழு தொகை வழங்கப்பட்டும் துவக்கப்படாத வீடுகள் :-

| வ. எண். | பயனாளியின் பெயர் | கிராமத்தின் பெயர் | பயனாளி குறியீட்டு எண். (Work ID) | பட்டியல் தொகை ரூ. | கட்டுமான பொருட்களின் தொகை ரூ. | கூடுதல் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ரவி முத்துக்கண்ணு | வெண்டையம்பட்டி | TN1281546 | 1.20 லட்சம் | 33,762/- | 1,53,762 |
| 2 | பேயமுத்து பன்னீர்செல்வம் | வெண்டையம்பட்டி | TN2054649 | 1.20 லட்சம் | 33,762/- | 1,53,762 |
| 3 | சவுந்தலிங்கம் அலங்காராஜ் | ராயமுண்டான்பட்டி | TN2152309 | 1.20 லட்சம் | 28,642/- | 1,48,642 |
| | | | | | கூடுதல் | 4,56,166 |

**கையாடல் 2 :**

2016-2017ம் ஆண்டு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வெண்டையம்பட்டி கிராம ஊராட்சியில் கீழ்காணும் 2 பயனாளிகளின் பெயரில் ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளுக்கு அரசு விதிமுறைகளுக்கு மாறாக போலியான ஆவணங்கள் தயார் செய்து இணையதளத்தில் பதிவு செய்து பட்டியல் தொகை ரூ.1,72,744/- விடுவிக்கப்பட்ட வகையிலும் மற்றும் ரூ.47,219/- மதிப்புக்கு மூலப்பொருட்கள் விநியோகம் செய்த வகையிலும் கூடுதல் தொகை ரூ.2,19,963/- அரசு நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே கட்டிய வீட்டிற்கு பணம் பெற்றவர்கள் விவரம் :-

| வ. எண். | பயனாளியின் பெயர் | கிராமத்தின் பெயர் | பயனாளி குறியீட்டு எண். (Work ID) | பட்டியல் தொகை ரூ. | கட்டுமான பொருட்களின் தொகை ரூ. | கூடுதல் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | துரைய்யா ரெங்கராஜ் | வெண்டையம்பட்டி | TN2262861 | 1.20 லட்சம் | 33,842/- | 1,53,842/- |
| 2 | மணிமலர் | சொரக்குடிப்பட்டி | TN1467681 | 52,744/- | 13,377/- | 66,121/- |
| | | | | | கூடுதல் | 2,19,963/- |

**கையாடல் 3: அரசு ஊழியர் வீடு கட்டியது :-**

வெண்டையம்பட்டி, கிராம ஊராட்சியில் 2016-2017ம் ஆண்டு (Work ID : TN2186159) பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ், வெண்டையம்பட்டி கிராம ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து வரும் (வி.குமார் (வையாபுரி குமார்) என்பவர் பெயரில் **1800 சதுர அடியில்** வீடு கட்டப்பட்டுள்ளது. பட்டியல் தொகை ரூ.1,20,000/- மற்றும் ரூ.28,642/-க்கு கட்டுமானப் பொருட்கள் கிரயத்தொகை அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. அரசு ஊழியரான இவர் தனது பதவியை தவறாக பயன்படுத்தி முறைகேடுகள் செய்து வீடு கட்டிதன் மூலம் அரசு நிதி ரூ.1,48,642/-யை கையாடல் செய்துள்ளார். அரசு ஊழியர் பிரதமமந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடு பெற

தகுதியற்றவர் ஆவர். ஆயினும் இவர் பெயரில் வீடு ஒதுக்கி கையாடல் நடைபெற்றுள்ளது.

**கையாடல் 4 :**

2016-2017ம் ஆண்டு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வெண்டையம்பட்டி கிராம ஊராட்சி சொரக்குடிப்பட்டி குக்கிராமத்தில் கீழ்காணும் 2 பயனாளிகளின் பெயரில் பட்டியல் தொகை பெறப்பட்டு ஒரே வீடாக கட்டப்பட்டு 2 வீடாக கணக்கு அரசு அலுவலர்களால் காட்டப்பட்டு அரசு பணம் ரூ.1,32,242/- முறைகேடாக வழங்கப்பட்டு அதில் ரூ.66,121/- கையாடல் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | வீடுகளின் எண்ணிக்கை | பயனாளியின் பெயர் | கிராமத்தின் பெயர் | பயனாளி குறியீட்டு எண். (Work ID) | பட்டுவாடா செய்த தொகை விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | i) ஜார்ஜ் பாத்திமாமேரி | சொரக்குடிப்பட்டி | TN1479912 | பயனாளி ஒருவருக்கு ரூ.66,121/- வீதம் கூடுதல் ரூ.1,32,242/- வழங்கப்பட்டுள்ளது |
| | | ii) ஜார்ஜ் ஜோசப் | சொரக்குடிப்பட்டி | TN1399158 | |

**கையாடல் 5 :**

கீழ்காணும் 5 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டத் தொடங்கப்படாமலேயே முதல் பட்டியல் தொகை விடுவிக்கப்பட்டு 5 பயனாளிகளுக்கு ரூ.26,029/- வீதம் கூடுதல் தொகை ரூ.**1,30,145/-** விதிமுறைகளை மீறிய வகையில் முறைகேடாக வழங்கப்பட்டதன் மூலம் அரசு நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பயனாளியின் பெயர் | கிராமத்தின் பெயர் | பயனாளி குறியீட்டு எண். (Work ID) | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | தோமஸ் ஜெயமேரி | சொரக்குடிப்பட்டி | TN1289932 | 26,029/- |
| 2 | தோமஸ் ஆரோக்கியமேரி | சொரக்குடிப்பட்டி | TN1399208 | 26,029/- |
| 3 | பேச்சிமுத்து மாரியப்பா | வெண்டையம்பட்டி | TN1558860 | 26,029/- |
| 4 | ராதிகா ராஜேந்திரன் | வெண்டையம்பட்டி | TN1749730 | 26,029/- |
| 5 | பேச்சிமுத்து ராஜாமணி | வெண்டையம்பட்டி | TN2081484 | 26,029/- |
| | | | கூடுதல் | 1,30,145/- |

**கையாடல் 6 :**

2016-17ம் ஆண்டு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வெண்டையம்பட்டி கிராம ஊராட்சியைச் சேர்ந்த கீழ்காணும் 3 பயனாளிகளின் வங்கி கணக்குகளில் முதல் பட்டியல் தொகை வரவாக்கப்பட்டிருந்தது. அவற்றிலிருந்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, செங்கிப்பட்டி கிளை, வங்கி தொடர்பாளராக பணிபுரியும் திருமதி.கே.வானதி என்பவர் பெயரில் ஒவ்வொரு கணக்கிலிருந்தும் ரூ.26,000/-வீதம்

கூடுதல் ரூ.78,000/- தொகை எடுக்கப்பட்டுள்ளது. இவர் வெண்டையம்பட்டி ஊராட்சி செயலாளரான திரு.வி.குமாரின் மனைவி ஆவார். அவரது பெயரிலேயே வங்கி கணக்கிலிருந்து பயனாளிகளை ஏமாற்றி பணம் நேரடியாக எடுக்கப்பட்டுள்ளதால் PMAY திட்டத்தில் பயனாளிகள் பெயரில் முறைகேடாக நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளது. கணவர் ஊராட்சி செயலர் மனைவி வங்கி தொடர்பாளராக உள்ளதால் 100 நாள் வேலைத்திட்டத்திலும் கையாடல் செய்துள்ளனர்.

| வ. எண். | பயனாளியின் பெயர் | கிராமத்தின் பெயர் | வங்கி கணக்கு எண். (Bank Account No.) | கேவானதி எடுத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பார்வதி பேச்சிமுத்து | வெண்டையம்பட்டி | 100801000012749 | 26,000/- |
| 2 | ஜெயமேரி தோமஸ் | சொரக்குடிப்பட்டி | 100801000015842 | 26,000/- |
| 3 | ரவி முத்துக்கண்ணு | வெண்டையம்பட்டி | 100801000019885 | 26,000/- |
| | | | கூடுதல் | 78,000/- |

**<u>கையாடல் 7:</u>**

2016-17ம் ஆண்டு பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ், வெண்டையம்பட்டி, சொரக்குடிப்பட்டி, கணேசபுரம் மற்றும் புதுத்தெரு ஆகிய கிராமங்களில் உள்ள 15 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டி முடிக்கப்படாமலேயே முறைகேடாக வீடு ஒன்றிக்கு தலா 1.20 லட்சம் வீதம் கூடுதல் தொகை ரூ.18 லட்சம் வழங்கப்பட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பயனாளியின் பெயர் | கிராமத்தின் பெயர் | பயனாளி குறியீட்டு எண். (Work ID) | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | கலியபெருமாள் ராசாமணி | வெண்டையம்பட்டி | TN1710075 | 1.20 லட்சம் |
| 2 | நந்தகோபால் வரதராஜன் | வெண்டையம்பட்டி | TN2274406 | 1.20 லட்சம் |
| 3 | கோவிந்தராஜ் சிவசாமி | வெண்டையம்பட்டி | TN1768200 | 1.20 லட்சம் |
| 4 | சிங்கராயர் தேவசகாயம் | வெண்டையம்பட்டி | TN166310 | 1.20 லட்சம் |
| 5 | கலியபெருமாள் மாரியப்பா | வெண்டையம்பட்டி | TN1562390 | 1.20 லட்சம் |
| 6 | வீராசாமி ராமமூர்த்தி | வெண்டையம்பட்டி | TN1561241 | 1.20 லட்சம் |
| 7 | அய்யாசாமி சந்திரசேகர் | வெண்டையம்பட்டி | TN1580093 | 1.20 லட்சம் |
| 8 | கலியபெருமாள் ராணி | வெண்டையம்பட்டி | TN1311402 | 1.20 லட்சம் |
| 9 | மதியழகன் பெரியசாமி | வெண்டையம்பட்டி | TN1657228 | 1.20 லட்சம் |
| 10 | பிச்சைமுத்து அந்தோணி குரூஸ் | சொரக்குடிப்பட்டி | TN1454836 | 1.20 லட்சம் |
| 11 | அந்தோணி குரூஸ் ஆரோக்கியதாஸ் | சொரக்குடிப்பட்டி | TN1399503 | 1.20 லட்சம் |
| 12 | அழகன் தங்கமணி | கணேசபுரம் | TN2003134 | 1.20 லட்சம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | தங்கவேல் சொக்கலிங்கம் | புதுத்தெரு | TN1967164 | 1.20 லட்சம் |
| 14 | கௌதம்மாள் | புதுத்தெரு | TN1966955 | 1.20 லட்சம் |
| 15 | துரைசாமி ஞானரெத்தினம் | வெண்டையம்பட்டி | TN1663570 | 1.20 லட்சம் |
| | | | கூடுதல் | 18,00,000/- |

**கையாடல் 8 :**

**தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனி நபர் இல்லக் கழிவறை கட்டும் திட்டத்தின் மூலம் நடைபெற்ற கையாடல்கள்**

தனிநபர் இல்லக் கழிவறைகளுக்கு பட்டியல் தொகை பயனாளிகளுக்குத் தான் வழங்கப்பட வேண்டும். ஆனால் மேற்குறிப்பிட்ட அரசு அலுவலர்கள் அனைவரும் "**கூட்டு சேர்ந்து கையாடல் செய்ய ஏதுவாக ஊராட்சி செயலர் திரு.வி.குமாரின் மைத்துனர் திரு.எஸ்.பிரசாத் என்பவருக்கு**" 2016-17 (13 கழிவறைகள்) மற்றும் 2017-18 (127 கழிவறைகள்) ஆக கூடுதல் 140 கழிவறைகள் கட்டப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.12100/- வீதம் கூடுதல் ரூ.14,80,000/-த்தை ஒப்பந்த முறை மூலம் வழங்கி கையாடல் செய்துள்ளனர். இது அரசாணை எண்.141 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை நாள் 21.11.2017க்கு புறம்பான செயலாகும். இவ்வாறு இத்திட்டத்தில் கையாடல் நடைபெற்றுள்ளது.

மேலும் கீழ்காணும் 5 பயனாளிகளுக்கு 2016-17ம் ஆண்டு தனி நபர் இல்லக் கழிவறை கட்டும் பணிகள் துவக்கப்படாமலேயே முழு பட்டியல் தொகை ரூ.12,000/- வீதம் கூடுதல் தொகை ரூ.60,000/- கையாடல் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பயனாளியின் பெயர் | கிராமத்தின் பெயர் | பயனாளி குறியீட்டு எண். (Work ID) | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | சார்லஸ் பிளமின்தாஸ் | இராயமுண்டான்பட்டி | 8243294 | 12,000/- |
| 2 | ஜான்சிராணி ஆனந்த் | இராயமுண்டான்பட்டி | 8242646 | 12,000/- |
| 3 | மாரியப்பா பேச்சிமுத்து | வெண்டையம்பட்டி | 7373151 | 12,000/- |
| 4 | அழகர் முனியாண்டி | வெண்டையம்பட்டி | 7372536 | 12,000/- |
| 5 | பார்வதி மருதையன் | வெண்டையம்பட்டி | 7373312 | 12,000/- |
| | | | கூடுதல் | 60,000/- |

மேலும், பணிகள் முடிவுறாமல் பட்டியல் தொகை ரூ.12,000/- வீதம் 29 கழிவறைகளுக்கு ரூ.3,48,000/- முழுமையாக விதிமுறைகளுக்கு மாறாக முறைகேடாக பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

<u>மொத்த கையாடல் :</u>

ஊராட்சி செயலர் திரு.வி.குமார் ரூ. 9,54,916/-

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)திரு.து.ரகுநாதன் +

பொறியாளர் ஜி.ரமேஷ் + ரூ.14,80,000/-

பணிமேற்பார்வையாளர் ஜி.ராதாகிருஷ்ணன் +

ஊராட்சி செயலாளர் திரு.வி.குமார்

கூடுதல் ரூ.24,34,916/-

எனவே மேற்குறிப்பிட்ட 4 அரசு அலுவலர்களான 1) வெண்டையம்பட்டி ஊராட்சி செயலர் **திரு.வி.குமார்**, 2) பணி மேற்பார்வையாளர் **திரு.ஜி.ராதாகிருஷ்ணன்**, 3) பூதலூர் ஒன்றிய பொறியாளர் **திரு.ஜி.ரமேஷ்**, 4) பூதலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) **திரு.து.ரகுநாதன்**, ஒப்பந்தக்காரர் **திரு.எஸ்.பிரசாத்** தாங்கள் ஏற்கனவே கட்டிய சொந்த வீட்டை காண்பித்து அரசாங்கத்தை ஏமாற்றி அரசு பணத்தை கையாடல் செய்த பயனாளிகள் 1) **துரையா ரெங்கராஜ்**, 2) **மணிலா** ஆகியோர் மற்றும் பயனாளிகளை ஏமாற்றி பணம் எடுத்த இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, செங்கிப்பட்டி கிளை தொடர்பாளரும், ஊராட்சி செயலரின் மனைவியுமான **திருமதி.கே.வானதி** மீது கூட்டு சதி செய்து அரசு பணத்தை கையாடல் செய்துள்ளார்கள்.

நான் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நீதி பேராணை வழக்கு எண். WP (MD) No.16122/2018 வழக்கு தொடுத்தேன். அந்த நீதி பேராணை வழக்கில் மேற்படி உயர்நீதிமன்றம் 6.8.2018 தேதியிட்டு தஞ்சை மாவட்ட ஆட்சியருக்கு மேற்படி ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டுள்ள அரசு அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் இதுநாள்வரை மேற்படி நபர்கள் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. ஆதலால் தாங்கள் உடனே ஊழலில் ஈடுபட்டுள்ள மேற்படி நபர்கள் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்திட உரிய உத்திரவு பிறப்பிக்க வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பு: இத்துடன் ஆதார ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. நன்றி ! இப்படிக்கு sd/-xxxxxxxxx (**ஆர்.இராமச்சந்திரன்**) நகல்: 1) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள், தஞ்சாவூர். 2) துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் (DVAC), தஞ்சாவூர். 3) துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், திருவையாறு. 4) காவல் ஆய்வாளர், பூதலூர்.

அய்யா,

மேற்படி புகார் மனுவின்படி இன்று 03.06.2019 ஆம் தேதி 16.30 மணிக்கு திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, துணை காவல் கண்காணிப்பாளர் ஆகிய நான், தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு (பொறுப்பு) துணை காவல் கண்காணிப்பாளராக அலுவலக பணியில் இருந்த போது, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண். PT222/2019/RDP/TH, நாள்.07.05.2019ன்படி தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 13.05.2019-ல் கிடைக்கப்பெற்ற குறிப்பாணையும், அதனுடன் இணைக்கப்பட்டிருந்த திரு.R.இராமச்சந்திரன் என்பவரது புகார் மனு மற்றும் இணைப்புகளையும் பார்வையிட்டு, அப்புகாரின்பேரில் இன்று 03.06.19ந்தேதி 16.30 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.04/2019, பிரிவு 120(b), 467, 468, 471 IPC and 13(1)(c) r/w 13(2) of P.C. Act-1988 r/w 109 IPC ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. Sd/- B.Manikandan, Deputy Supdt. of Police, V&AC, Trichy, Incharge Thanjavur. 03/06/19.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனு மற்றும் அதனுடன் கூடிய இணைப்புகளையும் (பக்கம் 1 முதல் 48 வரை) தஞ்சாவூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் (தனி நீதிபதி) இருப்பு கும்பகோணம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பியும் ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.

03/06/19

B. MANIKANDAN
Dy. SP (V&AC),
Trichy.
I/c. Thanjavur.